Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 3 வியாழக்கிழமை (18-12-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 20

# ஜனாதிபதியுடன் நேற்று தேர்தல் ஆணையர் சந்திப்பு

## யாழ். தேர்தல் குறித்து ஆராய்வு

கொழும்பு, டிசம்பர் 18

தேர்தல் ஆணையாளர் தயானந்த தஸநாயக்க நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தினார். யாழ். தேர்தல் நிலைவரம் குறித்து அவர் ஜனாதிபதியுடன் ஆராய்ந்ததாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து தேர்தலை ஒத்தி வைக்கக் கோரி அதற்கான காரணங்களை தெரிவித்தது.

★ யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடைபெறுவதற்கான சூழ்நிலை இல்லை.

★ தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ள சில தமிழ்க் கட்சிகளில் ஆயுதக் குழுக்கள் இயங்குதல்.

★ வாக்காளர்கள் [illegible]டம் பெயர்ந்து வாழுதல்.

★ யாழ். மாவட்டத்தில் சுதந்திரமான நடமாட்டத்துக்கான வாய்ப்புகள் இல்லை; போன்றவை தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசுக்கு கிடையாது

### அமைச்சர் அலவி மௌலானா தெரிவிப்பு

கொழும்பு, டிச. 18

யாழ். மாவட்ட உள்ளுராட்சிச் சபைகளுக்கும் இளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்கும் நடைபெற உள்ள தேர்தல்களை ஒத்தி வைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

மாகாணசபைகள், உள்ளுராட்சி அமைச்சர் அலவி மௌலானா நேற்று செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து உள்ளுராட்சித் தேர்தலைப் பின்போடுமாறு கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உள்ளுராட்சித் தேர்தல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் வேட்புமனு தாக்கல் இல்லை

யாழ்ப்பாணம், டிச. 18

யாழ். மாவட்ட உள்ளுராட்சிச் சபைகளுக்கான வேட்பு மனுக்கள் நேற்றும் எந்தக் குழுவினராலும் தாக்கல் செய்யப்படவில்லை.

தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களைக் கையேற்பதற்காக யாழ். வந்துள்ள தேர்தல் திணைக்களத்தின் ஆறு அதிகாரிகளும் காலை முதல் மாலை வரை யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இருந்தனர்.

ஆனால் எந்தக்குழுவினரும் வேட்புமனுத் தாக்கல் செய்ய அங்கு வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

செயலகப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் இம் மாதம் 23 ஆம் திகதி ஆகும்.

(இ-3)

## அடுத்த கட்ட உண்ணாவிரதம் யாகப்பர் தேவாலய முன்றலில்

யாழ்ப்பாணம், டிச. 18

குடாநாட்டில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்களின் விவரங்களை வெளியிடக் கோரி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். புனித யாகப்பர் தேவாலயத்தில் அடையாள உண்ணாவிரதம் நடைபெற விருக்கிறது.

கைதாகி தகவலற்றோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் இணைந்து இந்த உண்ணாவிரத நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

கைதாகி தகவலற்றோர் விவரங்கள் அடங்கிய படிவம் ஒன்று தகவல் அற்றோரின் பாதுகாவலர்களால் அன்றைய தினம் நிரப்பப்படும் என்றும் —

ஜனாதிபதியைச் சந்திக்கும் போது அந்தப் படிவம் அவரிடம் கையளிக்கப்படவிருப்பதால் சகலரையும் உண்ணாவிரதத்தில் பங்குபற்றுமாறும் — அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## கிரான் பகுதியில் தாக்குதல் இரு படையினர் பலியாகினர்

மட்டக்களப்பு, டிச. 18

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி, கிரானில் நேற்று மாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

வீதி கண்காணிப்பு முடிந்து கும்புறுமுலை முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் புலிகள் மறைந்திருந்து தாக்குதல் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-21)

## மட்டக்களப்பில் மோதல்

மட்டக்களப்பு, டிச. 18

மட்டக்களப்பு தளுவாய் என்னுமிடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் தேசிய துணைப் படைகுமிடையில் நடைபெற்ற மோதலில் துணைப் படை வீரரொருவர் கொல்லப்பட்டார்.

இப்பிரதேசத்தில் தேடுதல் மேற்கொள்ளப்பட்ட போது இருதரப்பினரும் மோதிக் கொண்டனர்.

இச் சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-21)

### முச்சந்தி முரளி



ஆசை வார்த்தை காட்டு கினம் போல.........!

## படையினர் ஐவர் காயம்

வவுனியா, டிச. 18

'வெற்றி உறுதி' படையினரின் நிலைகள் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 5 படையினர் காயமடைந்தனர்.

படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாக யுத்த முனைச் செய்திகள் தெரிவித்தன.

(இ-164-21)

## மாநகர, நகர, பிரதேச சபை உறுப்பினர் சம்பளம் அதிகரிப்பு

### அடுத்த மாதம் தொடக்கம் அமுலாகும்

கொழும்பு, டிச. 18

உள்ளுராட்சி மன்றங்களின் சகல உறுப்பினர்களது சம்பளங்களையும் அடுத்த மாதம் முதலாம் திகதி அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்ளுராட்சிமன்ற, மாகாணசபைகள் அமைச்சர் அலவி மௌலானா முன்வைத்த சிபார்சுக்கமைய இந்த முடிவு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாரதீய ஜனதா - அ. தி. மு. க. தமிழகத்தில் தேர்தல் கூட்டு

சென்னை, டிச. 18

அ. தி. மு. கவும், பாரதீய ஜனதாவும் தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் தேர்தல் கூட்டு வைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

நேற்றுக்காலை தமது இல்லத்தில் பாரதீய ஜனதாக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 4 இளைஞர்களின் சடலங்கள் படையினரால் ஒப்படைப்பு

வடமராட்சி, டிச. 18

இனந்தெரியாத நான்கு இளைஞர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் படையினரால் ஒப்படைக்கப்பட்டன.

வதிரியில் நடந்த மோதலின் போது இந்த நான்கு இளைஞர்களும் சுட்டுக்கொல்லப்பட்டதாக கூறப்பட்டது.

இதே நேரம் வதிரி அல்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைக்காட்சி பார்த்த 750 சிறுவர்கள் சுகவீனம்

ரோக்கியோ, டிச 18

ஜப்பானில் 'போப்மான்' என்னும் சிறுவர்களுக்கான கார்ட்டூன் சித்திரத் தொடரை தொலைக்காட்சியில் பார்த்த சிறுவர்களில் 750 க்கும் அதிகமானவர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு அதிர்ச்சி, இசைப்பு, வலிப்பு ஆகியன ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தக் கார்ட்டுன் உருவங்களின் செந்நிறக்கண்களில் இருந்து புறப்பட்ட செங்கதிர்கள் ஐந்து வினாடிகளுக்குச் சிறுவர்களின் கண்களைத் தாக்கியுள்ளன. இதன்காரணமாக தங்களது பார்வை குறைந்து விட்டதாகச் சில சிறுவர்கள் தெரிவித்தனர்

இந்தச் சித்திரம் 37 தொலைக்காட்சி நிலையங்கள் மூலம் ஒளிபரப்பப்படுகின்றது.

ஏப்ரல் மாதத்தில் இருந்து ஒளிபரப்பப்படும் இந்த நிகழ்ச்சிக்கு அதிக எண்ணிக்கையான சிறுவர்கள் ரசிகர்களாக [illegible]

(இ-3)

## அராலி வாசி மட்டக்குளியில் கைது!

கொழும்பு, டிச. 18

கொழும்பு மட்டக்குளி வீடொன்றில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் பிரிவு உறுப்பினரொருவர் கல்கிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன-

அராலி வாசியான சதாசிவம் நிமலகுமார் என்பவரே கைதானவர் என்றும் —

இவரிடமிருந்து 5 சயனைட்டுகள், தற்கொலையாளிகள் அணியும் கவசம் என்பன மீட்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேவைகள்/ விற்பனை

V.H.F., U.H.F. அன்ரனாக்கள் சிறந்த முறையில் பூட்டிக் கொடுக்கப்படும். தையல் மெஷின்களும் திருத்திக் கொடுக்கப்படும். புதிய V.D.O. டெக்குகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

அ. அற்புதகுமார்,
5, டச்சு வீதி,
சாவகச்சேரி.

(சி/2400)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி முருகேசு

கோப்பாய் தெற்கு, விதானையார் வளவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரி முருகேசு அவர்கள் 15-12-97 அன்று திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், திரு எஸ். முருகேசு (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. ராஜன் அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி பார்வதபத்தினி, சரஸ்வதி (விரிவுரையாளர், மட்டக்களப்பு இசை, நடனக் கல்லூரி), சதாசிவகுமார் (பொலீஸ் உதவிப் பரிசோதகர், திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல. 01, பொலீஸ் விடுதி, திருகோணமலை இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் நேற்று (17-12-1997) மாலை 4 மணிக்கு திருகோணமலை இந்து மயானத்தில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ராஜன்
(மகன்)

(சி/-398)

### செல்லையா அருளப்பு

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த செல்லையா அருளப்பு 16-12-1997 செவ்வாய்க்கிழமையன்று கொழும்பில் அகாலமரணமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா — சிதம்பரம் மரியம்மாவின் இளையமகனும், சிங்கராஜா, யோசேப்பு (கனடா), இராயப்பு ஆகியோரின் அன்புத் தம்பியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்:
சி. சேரரூபன்
(பேரமகன்)

கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

(51921)

### கந்தையா வேலுப்பிள்ளை

ஆவந்தனை களபூமி காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை 16-12-97 இல் காலமானார். இவர் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், சற்குணராசா, சிவராசா (மல்லாவி), தேவராசா (குருநாகல்), சியாமளா மற்றும் கேதீஸ்வரன், சுரேந்திரன் (கலாநிதி ஆ. தியகராசா ம. ம. வி. மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ் சென்ற குமாரசாமி மற்றும் நடராசா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஆ கனகசபை (முன்னாள் சாரதி, இ. போ. ச. காரைநகர்) யின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 18-12-97 இன்று நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
வே ராசன்
(மகன்)

ஆவந்தனை,
களபூமி,
காரைநகர்

(51912)

### ஆறுமுகம் இராமநாதன்

காரைநகர் களபூமி தன்னையைப் பிறப்பிடமாகக் கொண்ட விநாசித்தம்பி ஆறுமுகம் இராமநாதன் அவர்கள் 16-12-97 அன்று காலமானார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன், சிவபாலன், சுந்தரலிங்கம், சாம்பசிவம் ஆகியோரின் அன்புத் தந்தையும், பார்பதிப்பிள்ளை, இலட்சுமி, சுப்பிரமணியம், ரோகிணி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமலட்சுமியின் அன்புமாமனாரும் முரளிதரன், துஷாந்தி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-12-97 அன்று புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லைமயானத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
பாலச்சந்திரனும் சகோதரர்களும்
(மக்கள்)

தன்னைகளபூமி,
காரைநகர்.

(51915)

## சங்கானையில் தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம் டிச. 18

தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் வீட்டுத் தோட்ட மானியத் திட்டத்தின் கீழ் 600 உயரின தென்னங் கன்றுகள் இன்று வியாழக்கிழமை சங்கானையில் இலவசமாக வழங்கப்பட இருக்கின்றன.

இன்று பிற்பகல் 2மணிக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் வைத்து சங்கானை பிரதேச செயலர் பகுதியிலுள்ள 4 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு இவை விநியோகிக்கப்படும்.

தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் தலைமையில் நடைபெறும் மேற்படி வைபவத்தில் சங்கானை பிரதேச செயலர் கே. சந்திரராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். தென்னைப் பயிர்ச்செய்கைக் கருத்தரங்கும் அங்கு இடம்பெறும். (ஐ - 4)

## ஐ.நா. பிரதிநிதிகள் சந்திப்பு

நல்லூர், டிச. 18

கைதாகிக் காணாமற் போனோர்பாதுகாவலர் சங்க பிரதிநிதிகளையும் அன்னையர் முன்னணிப் பிரதிநிதிகளையும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக பிரதிநிதிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப் பணிமனையில் சந்திக்கவுள்ளனர். (ஐ-103)

## பற்சிகிச்சை நிலையம்

திருநெல்வேலி, டிச. 18

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்திய சாலையில் புதிதாக நிறுவப்பட்ட பற்சிகிச்சை நிலையம் எதிர்வரும் ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது. கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு வழங்கிய நிதியைக் கொண்டு சுமார் எட்டு இலட்சம் ரூபா செலவில் இப் புதிய பற்சிகிச்சை நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், டிச. 18

தேசிய கல்வி நிறுவக யாழ். இந்துக் கல்லூரி நிலைய கல்வி டிப்புளோமா செயலமர்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறமாட்டாது எனவும் 27 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமெனவும் அறிவிக்கப்படுகிறது. (இ)


**BOSCO INSTITUTE**
25, றக்கா வீதி, யாழ்.

**Spoken English**
By **BRITTO**
புதிய பிரிவு ஆரம்பம்:
20 — 12 — 97
காலை 10.00 மணி

★ குறியீட்டு அளவையியல் ★
By
திரு. பத்மராஜ்
ஆரம்பம்: 23 - 12 - 97
காலை 6.30 — 7.30

(51923)

**லிபேட்டி சினிமா**
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
[illegible]
நேரம்: 10-30, 2-30
(51893)

## தொழிநுட்பக் கல்லூரி
### யாழ்ப்பாணம்
## இறுதிப் பரீட்சைகள் - 1997

எமது தொழிநுட்பக் கல்லூரியின் கீழ்க்காணும் பயிற்சி நெறிகளுக்கான இறுதிப்பரீட்சைகள் 02-01-1998 இல் ஆரம்பமாகின்றன. பரீட்சைக்கான நேரசூசியினைக் கல்லூரி அறிவித்தற் பலகையில் பார்வையிடலாம். பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள், பரீட்சைக்கான தமது அனுமதி அட்டைகளை 29-12-1997 அன்று கல்லூரிக்குச் சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

### 02-01-1998 இல் ஆரம்பமாகவுள்ள பயிற்சி நெறிகள்

1. தொழிநுட்பவியலிலான தேசிய தராதரப் பத்திரம் குடிசார் எந்திரவியல் (NCT – Civil)
2. தொழிநுட்பவியலிலான தேசிய தராதரப் பத்திரம் பொறி எந்திரவியல் (NCT – Mechanical)
3. தொழிநுட்பவியலிலான தேசிய தராதரப் பத்திரம் மின் எந்திரவியல் (NCT – Electrical)
4. தொழிநுட்பவியலிலான தேசிய தராதரப் பத்திரம் கணிய அளவீடு (Q.S)
5. தொழிற்பயிற்சி நெறிகள்
6. பயில்நிலை படவரைஞர் (Drughtsmanship)

க. ஜெயரெட்ணம்
அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1997-12-16

(சி/2397)

### யாழ். மாவட்ட
## வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின்
## முக்கிய அறிவித்தல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகளில் இருந்தும் நியமிக்குமாறு கோரி எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆசிரிய நேர்முகப் பரீட்சையை ஆட்சேபிக்கும் முகமாக அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை இன்று சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள், இணைப்பாளர்களைச் சந்திக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வேலையற்ற
பட்டதாரிகள் சங்கம்,
யாழ். மாவட்டம்.

17-12-1997.

(51916)

## மோட்டார் சைக்கிள் சாரதி
## உடன் தேவை

HONDA-200 மோட்டார் சைக்கிள் ஓடிப் பயிற்சி பெற்ற சாரதி, அனுமதிப்பத்திரம் [ Motor Cycle-Licence ), பெற்றவர் இரு நற்சான்றுப் பத்திரங்களுடன் (அவசியம்) உடனே நேரில் கீழ் வரும் முகவரிக்கு வரவும்.

**Dr. V. A SELVARATNAM,**
**NO 91 BROWN ROAD,**
**JAFFNA**

[51909]


## மரண அறிவித்தல்

### திருமதி லூர்துமலர் அருளானந்தம்

மிருசுவில் பழைய வாய்க்காலைப் பிறப்பிடமாகவும், தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட லூர்துமலர் அருளானந்தம் 16-12-1997 அன்று செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கறுவல் அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், மேரி, அன்ரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நல்லதம்பியின் மாமியும், றூபா, தோமேஸ்வரன், தேவா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற மரியான் றோசம்மாவின் அன்பு மகளும், ஜெபம் (கொழும்பு), யேசுதாஸ் (மிருசுவில்), யோகம் (ஜேர்மனி), ராணி (ஜேர்மனி), தங்கம் (மிருசுவில்), தவம் (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், யேசுதாஸ், தர்மகுலசிங்கம், சுரேஸ்குமார், சற்குணதாஸன், வசந்த ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 17 12-97 அன்று முற்பகல் 12 மணிக்கு மிருசுவில் சேமக்காலையில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மரியான் றோசம்மா
(தாயார்)

மிருசுவில்.

(51924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்குடிகளிடையே பாகிஸ்தானில் மோதல்

## றொக்கெற் தாக்குதலுக்கு 25பேர் பலி

இஸ்லாமாபாத் டிச. 18

பாகிஸ்தானின் வட மேற்குப் பகுதியில் இரண்டு பழங்குடிப் பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலில் குறைந்தது 25 பேர் கொல்லப்பட்டிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

பழங்குடிப் பிரதேச மக்களிடையே நிலத் தகராறு காரணமாக இந்த மோதல் வெடித்தது. இருபிரிவினரும் மாறிமாறி றொக்கெற் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் எல்லையோரம் உள்ள பாகிஸ்தான் பழங்குடிப் பிரதேச மக்களிடையே நவீன ஆயுதங்கள் புழக்கத்தில் இருந்து வருவதாக அண்மையில் செய்திகள் வெளியாகி இருந்தன.

(ஐ)

## மூன்று ராணுவ ஜெனரல்கள் தென்னாபிரிக்காவில் கைது

ஜோஹனர்ஸ்பேர்க் டிச. 18

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் (முன்னாள் ஸயர்) இராணுவ ஜெனரல்கள் மூவர் தென்னாபிரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிபர் லோறன்ட் கபீலாவை ஆட்சியில் இருந்து கவிழ்க்கும் நோக்குடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதென தென்னாபிரிக்க தொலைக்காட்சி அறிவித்தது.

கின்ஸாசா நகருக்குத் தெற்கே ஓரிடத்தில் கூடி கபீலாவுக்கு எதிராகச் சதி நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து இவர்கள் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## ஹெலி விபத்தில் படை அதிகாரிகள் நால்வர் பலி

புதுடில்லி, டிச. 18

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் இந்திய விமானப் படையின் ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று முன்தினம் வீழ்ந்து நொறுங்கியதில் 4 விமானப்படை அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்

(இ-9)

## வெள்ளை மாளிகையில் நாய்க்குட்டி

வாஷிங்டன், டிச. 18

நண்பர் ஒருவரினால் அதிபர் கிளின்ரனுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட புதிய நாய்க்குட்டி ஒன்று வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்ந்துள்ளது.

சொக்கிலேற் நிறத்தை உடைய இந்த நாய்க் குட்டிக்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை. ஏராளமான பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

வெள்ளை மாளிகையில் வசிக்கும் சொக்ஸ் என்னும் பூனையுடன் இந்த நாய்க்குட்டி சேர்ந்து கொள்ளும். (ஐ)

## சுவாச நோய்க்கு 20 பேர் பலி

மெக்ஸிக்கோ, டிச. 18

வட மெக்ஸிக்கோவில் ஏற்பட்ட சுவாசத் தொற்று நோய் காரணமாக 20 பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த 100 ஆண்டுகளுக்குப் பின்னர் மெக்ஸிக்கோவின் பல பகுதிகளில் பனி பெய்ய ஆரம்பித்துள்ளது. இதனால் நோய்கள் பரவியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஐ)

## அல்ஜீரியாவில் 22 பொதுமக்கள் பலி

அல்ஜீயேர்ஸ் டிச. 18

அல்ஜீரியாவில் நேற்று முன்தினம் இரவு 22 பொதுமக்கள் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அல்ஜீரிய ராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக இஸ்லாமிய தீவிரவாதிகள் நடத்தும் போராட்டத்தில் பொது மக்கள் பலியாவது சமீப நாள்களாக அதிகரித்து வருகிறது.

(இ-9)

## அஸாமில் 4 பொலீஸார் பலி

புதுடில்லி, டிச. 18

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாமில் குண்டு ஒன்று வெடித்ததில் நான்கு பொலீஸார் கொல்லப்பட்டனர்; எட்டுப் பேர் காயமடைந்தனர்.

பொலீஸ் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த போது நேரம் குறித்து வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அஸாமுக்கு தனிநாடு கோரி ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிரிவினைக் கலகக்காரர்கள் இக்குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்டிருக்கலாமென பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

(இ-7)

## வியாழக் கிரகத்துக்கு சமீபமாக விண்கலம்

வாஷிங்டன், டிச. 18

அமெரிக்காவின் கலிலியோ விண்கலம் நேற்று முன்தினம் வியாழன் கிரகத்துக்கு மிகச் சமீபமாகப் பயணஞ் செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வியாழக் கிரகத்துக்கும் இந்த விண்கலத்துக்கும் இடையே இருநூறு கிலோ மீற்றர் இடை வெளியே அச்சமயம் காணப்பட்டது.

வியாழக் கிரகம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் இந்த விண்கலம் 1995 ஆம் ஆண்டு முதல் ஆயிரத்து 500 புகைப்படங்களைப் பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது.

வியாழக் கிரகத்தின் வளிமண்டலத்தில் நீர் ஆவியாகுவதையும், புயல் ஏற்படுவதையும் அவதானிக்கும் சந்தர்ப்பம் இதன் மூலம் கிடைத்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

## கிறிஸ்மஸ் தினம் கியூபாவில் விடுமுறை

### காஸ்ட்ரோ அறிவிப்பு

ஹவானா, டிச. 18

புனித பாப்பரசர் கியூபாவுக்கு விஜயம் செய்வதை கௌரவிக்குமுகமாக அதிபர் பிடல் காஸ்ட்ரோ இவ்வாண்டுக்கான கிறிஸ்மஸ் தினத்தை கியூப மக்களுக்கு விடுமுறை நாளாக வழங்கியுள்ளார்.

பாப்பரசர் தாம் விஜயம் செய்யும் நாடுகளுக்கு பாரம்பரியமாக அனுப்பிவரும் கிறிஸ்மஸ் செய்தியை கியூபா பத்திரிகைகள் பிரசுரிக்கும் என்றும் அவர் நாடாளுமன்றில் அறிவித்தார்.

கிறிஸ்மஸ் தினத்தை விடுமுறையாக காஸ்ட்ரோ அறிவித்திருப்பதை வத்திக்கான் வரவேற்றுள்ளது.

ஜனவரி 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை பாப்பரசர் கியூபாவில் விஜயம் செய்யவுள்ளார்.

(ஐ)

## இந்திய - பாக். போரின் வெற்றி நாள்

புதுடில்லி, டிச. 18

இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே நடந்த போரில் இந்தியா வெற்றியீட்டியதன் 26 ஆவது ஆண்டு நிறைவு தினம் நேற்று முன்தினம் வெற்றி நாளாகக் கொண்டாடப்பட்டது.

புதுடில்லியிலும், வேறு பல இடங்களிலும் இதை ஒட்டிய பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

(ஐ)

உலக அரங்கில்

# வழுக்கை ஆற்றில் தண்ணீரைச் சேமிப்பதற்கு யாழ். சாரணர்களின் உதவியைப் பெறலாம்

வழுக்கையாற்றுப் பகுதியில் தண்ணீரைச் சேமிப்பது குறித்து உதயனில் வெளியான செய்திமடலைப் படித்த வாசகர்— உதவி மாவட்டச் சாரணர் ஆணையாளர் சு. ஏகாம்பரநாதன் தெரிவிக்கும் யோசனை இது.

9-12-97 ஆம் திகதி உதயனில் வெளியான மழை நீரை வயல்களில் தேக்காவிடில் அபாயம் ஏற்படும் என்ற செய்தி மடலை வாசித்ததும், அதன் அவசரமும் அவசியமும் பற்றி உணர்ந்தவர்களில் நானும் ஒருவன் என்பதனால் உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்ற உந்துதலினால் எனது அபிப்பிராயத்தை உதயன் மூலம் வெளிப்படுத்த விரும்புகிறேன்.

சமூகத்திற்கும் நாட்டிற்கும் தொண்டு செய்யும் அனைத்து நிறுவனங்களுக்கும் மிகவும் இது பொருத்தமானதுமாகும்.

தற்போது இதன் அவசரம் அவசியம் என்பதை முன்னெடுத்து உடனடியாகச் சிரமதானப் பணிமூலம் ஆவன செய்ய அனைவரும் முன்வரவேண்டும் என விரும்புகிறேன்.

1981இல் யாழ். மாவட்டச் சாரணர் சங்கச் சாரணர்கள் இலங்கையில் சாரணர் சங்கம் ஆரம்பித்து 75 ஆவது ஆண்டு நிறைவு நாளை ஒட்டிய சமூக சேவைப் பணியில் சிரமதானம் மூலம் பூநகரி—சங்குப்பிட்டி ''மகாதேவா தாம் போதி'' பாதை அமைப்பில் ஈடுபட்டனர். இம் முன்மாதிரியைப் பின்பற்றி பல நிறுவனங்கள் இப் பணியில் ஈடுபட்டதன் மூலம் மிச்சம் பிடிக்கப்பட்ட பெருந்தொகைப்பணமானதுமேலும் பலயார் தூரங்களை அமைப்பதற்கும் பெருந்துணையாய் அமைந்தது.

சாரணர்கள் 10 நாள் பாசறை அமைத்து சாரணர்கள்— திரிசாரணர்கள், சாரண ஆசிரியர்கள், உ.மா. ஆணையாளர்கள் எனப் பல தரத்தினரும் மிக உற்சாகமாக இப்பணியில் ஈடுபட்டோம்; களிப்படைந்தோம். இதில் பங்குபற்றாதவர்கள் தமது தவறுக்காக வருந்தினார்கள்.

அப்போதைய அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா, திட்டமிடல் பணிப்பாளர்திரு சிவதாசன், பொறியியலாளர் திரு இராமகிருஷ்ணன் போன்றோர் எமதுபணியைப் பாராட்டினதோடமையாது, இதன் மகிமையை அங்கு ஒரு நினைவுக்கல்லில் முதன்மையாக எமது சாரணர்சங்கத்தின் பெயரையும் மற்ற நிறுவனங்களின்பெயர்களையும் பதித்து வைத்தார்கள். தற்போது அங்கு அந்தக் கல்லும் இடமும் எப்படி இருக்கின்றதோ யாமறியோம்.

அதுவல்ல முக்கியம் பணியும் முன்மாதிரியும் தான் முக்கியமானவையாகும்.

இதே போன்று வழுக்கை ஆற்றினையும் சிரமதான மூலம் உடனடியான தேவை கருதி நிறைவேற்றலாம் எனக் கருதுகின்றேன். அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் அப்பகுதி பிரதேச செயலாளர்கள், விவசாய அதிகாரிகள் ஆகியோரும் தொண்டர் ஸ்தாபனங்களும் அணிதிரண்டு ஆவன செய்ய முன்வரவேண்டும்.

செய்தி மடலில் உள்ள ஆலோசனைப்படி மண் மூடைகளினாலும், பலன் தராத பனை தென்னை மரக் குற்றிகளினாலும் இதனைத் தடுக்கலாம். இதற்கு அண்மையில் உள்ள மண்பிட்டிகளை மண் அள்ளுவதற்கும் பயன்படுத்தலாம். வண்டில், லான்ட்மாஸ்டர், டிராக்டர் போன்ற வாகனங்களின் உதவியோடு இதனைச் செய்யலாம்.

உரப்பைகள் தாராளமாகக் கிடைக்கின்றன. தொண்டர்கள் மண்ணை மண்பிட்டியிலோ அல்லது வாகனம் மூலமோ கொண்டு சென்று குவிக்கும் இடங்களில் பைகளை நிரப்பி அணை கட்ட உதவலாம்.

இதில் சாரணர்கள், முதல் உதவிப் படையினர், தொண்டர் நிறுவன அங்கத்தவர்கள், இளைஞர்கள், பெரியோர்கள் அனைவரும் ஈடுபட்டால் செய்து முடித்து உடனடியான பயனைப் பெற [illegible] தாழ்மையான அபிப்பிராயம்.

சாரணர்களது சமூகப்பணி நாட்டுப்பணிக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும். அவர்களது முன்னேற்றத்திற்கும் இது பெரும் உதவியாகவும் அமையும்.

எமது சாரணர்களும் வழுக்கையாறு குறித்து அறிய வேண்டும் என்பதற்காக, அவர்களது வீரதீர நடைப் பயணத்திற்கு இந்த ஆறு ஊடாகப்பயணஞ் செய்யமுன்னர் ஏற்பாடு செய்தேன். பல சாரணர்கள் எனது தெரிவை தங்கள் மனதில் நீங்காமல் இடம்பெற்ற பயணம் என்று ஆய்வு செய்து மெச்சினார்கள்.

எனவே இதன் பலனை நாம் முழுமையாகப் பெறுவதற்காக இப்பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆவன செய்ய முற்படுவது சம்பந்தப்பட்டவர்களது கடமையாகும்.

அரசாங்கம் இது போன்ற பணிகளைச் செய்வதற்காக நிதி ஒதுக்கி இருக்குமானால் அதனை இது போன்ற பணிகளில் ஆர்வங் காட்டும் தொண்டர் நிறுவனங்களுக்கு சலுகையாக ஒரு தொகையை உதவுவார்களேயானால் அது கூட விரும்பத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

வீண் காலதாமதம் நீரை வீணாக்கிக் கடலில் சேர்த்து விடும்.

★

## புள்ளிவிவர கையேடு

வடமராட்சி, டிச, 18

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவின் சகல விவரங்களும் அடங்கிய புள்ளிவிவரக் கையேடு ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கோப்பாய்ப் பிரதேச செயலகம் 50 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொண்டு வருகிறது. (ஐ-173)

## ச.ச. நிலையத்தை திருத்த நிதி

வடமராட்சி, டிச. 18

அண்மைக்கால நடவடிக்கைகளின் போது சேதமடைந்த புத்தூர் மகாத்மாஜி சனசமூக நிலையம் 25 ஆயிரம் ரூபா செலவில் திருத்தி புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான நிதியை பன்முக வரவு செலவுத்திட்டத்தின் கீழ் கோப்பாய்ப் பிரதேச செயலர் ஒதுக்கீடு செய்துள்ளார்.

(ஐ-173)

## திருத்தப்படாத மதகு

மல்லாகம், டிச. 18

நல்லூர் புதியசிவன் வீதியில் அமைந்துள்ள மதகு நீண்டகாலமாகச் சேதமடைந்த நிலையில் இருந்து வருகிறது.

இராணுவ நடவடிக்கைகளின் போது மதகின் மேற்பகுதி முழுவதுமாக தகர்க்கப்பட்டதால் வீதியின் நடுவே பெரும் குழி காணப்படுகிறது. ஒடுக்கமான சிறு வழி ஒன்றின் மேலாகவே தற்போது பாதசாரிகளும், சைக்கிளில் செல்வோரும் பயணஞ்செய்கின்றனர். (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு: உரும்பிராயில் இயங்கும் வலி - கிழக்கு கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், (வரையறுக்கப்பட்டது) பலாலிவீதி உரும்பிராய் பிரதேசசபைக்கு அருகில் தபாற் பெட்டி வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (51913)

## இலக்கண வகுப்பு

இலக்கண முறையில் ஆங்கில இலக்கணம், சிங்களம் கற்க தொடர்பு: 23, டச்சு வீதி, சுஷாந்தீஸ், சாவகச்சேரி. [51898]

## தேவை

யாழ்நகர எல்லைக்குள் தேவாலயம் கட்டுவதற்கு 4 அல்லது 5 பரப்புக் காணி உடன்தேவை. காணியின் உறுதி சீரானதாக இருக்க வேண்டும். (Vacant Possession) தொடர்பு இலக்கம்:- 672, உதயன், யாழ்ப்பாணம். (51911)

## யாழ்ப்பாணத்தில்

அந்த ஆறு மாதங்கள் உங்களது கதை அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை, வீரகேசரியில் தொடராக எழுதி உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களால் வாசிக்கப்பட்டது. யாழ். நகரில் எங்கும் கிடைக்கும். 50/- [51889]

## தவறிவிட்டன

ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்கம் இல. 135 கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் தங்கியிருக்கும் சாந்த மூர்த்தி தெட்சணாமூர்த்தி என்பவரது தேசிய அடையாள அட்டை (690684241 X), விசேட அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம், (சன்மானம் வழங்கப்படும். [51914]

## விற்பனைக்கு

சொந்கப் பாவனையில் உள்ள HONDA C90 மோட்டார் சைக்கிள் மற்றும் HONDA EGK 600 வாற்ஸ் GANERATOR JAPAN விற்பனைக்குண்டு. தொடர்பு: கிருபா வீடியோ, அல்லாரை வடக்கு மீசாலை. [51899]

பிறிமா புறோயிலர், பிறிமா கைலைன் பிறவுண் ஒருநாள் பேட்டுக் குஞ்சுகள் 22-12-97 இல் வழங்கப்படும். தேவையானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல் வேலியில் பதிவு செய்யவும். விலை ரூபா 52 மட்டும் [சி/2386]

## அன்னை சாரதாதேவி ஜெயந்தி விழா

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 145 ஆவது நாள் ஜெயந்திவிழா திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணி முதல் அனுஷ்டிக்கப்படவுள்ளது. விசேட பூசை, பஜனை, சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் மாலை வரை இடம்பெறும். (ஐ)

## விவசாய ஆலோசனைக் கூட்டம்

விவசாய ஆலோசனைக் குழுக் கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேசச் செயலக மண்டபத்தில் பிரதேசச் செயலரும், மேலதிக அரசாங்க அதிபருமான ந. வேதநாயகன் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது, (ஐ-90)

## மணியம் கல்வி நிறுவனம்

1 ஆம் கட்டை,
பருத்தித்துறை

ஆண்டு 5

விசேட பயிற்சி பரீட்சை
புலமைப் பரிசில் வகுப்பு
ஆசிரியர்:
திரு. சுப்பிரமணியம்
ஆரம்பம்: **20 - 12 - 97**

— நிர்வாகி

(51787)

## வடமராட்சி லயன்ஸ் கழகம்

## அதிர்ஷ்டலாபச்சீட்டு

பிற்போடப்பட்டிருந்த எமது கழகத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு **14-01-1998** ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று பிற்பகல் 3.00 மணிக்கு மந்திகையிலுள்ள கழகச் செயலகத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன். இதுவரை சீட்டுப் புத்தக அடிக்கட்டைகளை மீள ஒப்படைக்காதவர்கள் அவற்றை 07 - 01 - 1998 ஆம் திகதிக்குப் பிந்தாமல் தந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

ஆ. சிவசுவாமி,
தலைவர்.
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(சி- 2388)

## சமூக தொழிநுட்பக்கல்வி நிலையம் (கொம் ரெக்) சித்தன்கேணி

## மாணவர் அனுமதி - 1998

எமது கல்வி நிலையத்தில் 1998 ஆம் கல்வியாண்டிற்கான பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் கல்வி நிலையத்தில் 21 - 12 - 97 ஆம் திகதிக்குமுன் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி: 31 - 12 - 97. விண்ணப்பப் படிவத்தில் நிரப்பி அனுப்பப்படுபவை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

கற்கை நெறிகள்:-

1. தையற் பயிற்சி - 06 மாத பயிற்சி
2. தட்டச்சு, சுருக்கெழுத்து-தமிழ் - 06 மாத பயிற்சி
3. தட்டச்சு, சுருக்கெழுத்து - ஆங்கிலம் - 06 மாத பயிற்சி
4. நீர் இறைக்கும் இயந்திரம் பழுதுபார்த்தல் - 06 மாத பயிற்சி.

குறிப்பு:- கல்வித்தரம் குறைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

- தலைவர்

சமூக தொழிநுட்ப கல்வி நிலையம்,
சித்தன்கேணி. (51901)

## யாழ்ப்பாண மாநகரசபை

## மீள்கேள்வி அறிவித்தல் 1998

1. இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதும், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் உட்பட்டதுமான சந்தைகள், இறைச்சிக் கடைகள் ஆகியவற்றை 01 - 01 - 1998 முதல் 31 - 12 - 1998 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளராகிய என்னால் 24 - 12 - 1997 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 12-30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
2. கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணைப் பணமும், கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 250 செலுத்துவதன் பேரில் 23-12-97 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணி வரையும் யாழ்ப்பாண மாநகர சபையால் வழங்கப்படும், உத்தியோக பூர்வமான படிவங்களில் இணைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவங்கள் யாழ்ப்பாண மாநகர சபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் என்ற முகவரிக்கு சீல் வைத்த உறையிலிட்டு 24 - 12 - 1997 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 12-30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் மேல் கேள்விக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் போது ஏற்படும் தாமதங்களுக்கு யாழ்ப்பாண மாநகர சபை பொறுப்பேற்கமாட்டாது. கேள்வி 24 - 12 - 1997 ஆம் திகதி பிற்பகல் 2-30 மணிக்குத் திறந்து ஆராயப்படும், அத்தருணம் கேள்விதாரர் பிரசன்னமாக இருக்கலாம்

### அட்டவணை

| குத்தகை விவரம் சந்தைகள் | | கேள்விப்பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித்தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 01 பாசையூர்ச் சந்தை | | 2,500.00 | 30,500.00 | — |
| 02. நாவாந்துறைச் சந்தை | | 1,000.00 | 10,000.00 | — |
| 02. கொழும்புத்துறைச் சந்தை | | 500.00 | 1,100.00 | — |
| 04. யாழ். செயலக அருகில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | | 2,500 00 | 30,000.00 | — |
| இறைச்சிக் கடைகள்: | | | | |
| 05 குருநகர் | மா.இ.கடை-இல. 01 | 2,500.00 | 81,100.00 | 195 00 |
| 06 குருநகர் | மா.இ கடை-இல. 03 | 2,500.00 | 93,635.85 | 195.00 |
| 07. குருநகர் | ஆ. இ கடை-இல. 07 | 2,500.00 | 11,201.00 | 195 00 |
| 08. பாசையூர் | மா.இ.கடை-இல. 01 | 2,500.00 | 68,300.00 | 135.00 |
| 09. பாசையூர் | மா இ.கடை-இல. 03 | 2,500 00 | 50,500.00 | 135.00 |
| 10. நாவாநதுறை | மா.இ கடை-இல. 01 | 2,500.00 | 7,000.00 | 200.00 |
| 11 நாவாந்துறை | மா இ.கடை-இல. 02 | 2,500.00 | 6,500 00 | 200 00 |
| 12. நாவாந்துறை | மா.இ கடை-இல. 03 | 2,500.00 | 5,000.00 | 200 00 |
| 13. நாவாந்துறை | மா. இ.கடை-இல. 04 | 2,500.00 | 5,500.00 | 200.00 |
| 14. நாவாந்துறை | மா.இ.கடை-இல. 05 | 2,500.00 | 5,500 00 | 200.00 |
| 15. நாவாந்துறை | மா.இ.கடை-இல. 06 | 2,500.00 | 7,000.00 | 200.00 |
| 16. நாவாந்துறை | மா.இ.கடை-இல. 07 | 2,500.00 | 5,500.00 | 200.00 |
| 17. நாவாந்துறை | ஆ. இ.கடை-இல. 08 | 2,500.00 | 4,500.00 | 200.00 |

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகர சபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14-12-1997.

(சி/2392)

## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



மலர்வு: 25 — 11 — 1949

உதிர்வு: 29 — 12 — 1996

இணுவைத் திருவூர்
### அமரர் கணபதிப்பிள்ளை திருவிளங்கம்
(அலுவலர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்)
திதி: 18—12—97

அனுதினமும் ஆலயம் சென்று
அகமகிழப் பிரார்த்திக்கும் ஐயநீர்
கும்பிடப் போன வேளை
கூற்றுவன் அழைத்தான் அன்றோ
பிரசாதத்தோடு பிரியமாய் வரும் வேளை
காத்திருக்க
பிணமாக நீர் பேசாமல் வந்த நாள் இன்று
என் செய்வோம்? ஏங்கி அழுகின்றோம்
பிரார்த்திப்பதை விடப்
பிறிதொன்றும் தெரியவில்லை.

நகுலாதேவி திருவிளங்கம்
(அன்பு மனைவி)
பிள்ளைகள், சகோதரர்,
மைத்துனர், உறவினர்.

இணுவில் தெற்கு,
இணுவில்,

(சி/2394)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 226 விவசாயிகளுக்கு வடமராட்சி கிழக்கில் யூரியா

வடமராட்சி, டிச. 18

வடமராட்சி கிழக்குப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு புலோலி கமநல சேவை நிலையத்தில் வைத்து யூரியா உரம் வழங்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் குடத்தனை, அம்பன், நாகர் கோயில் செம்பியன்பற்று ஆகிய இடங்களில் 190 ஹெக்ரெயர் நெற்செய்கை மேற்கொண்டுள்ள 226 விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்பட்டதாக புலோலி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

(ஐ-173)

## நத்தார் ஒளிவிழா

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி நத்தார் ஒளிவிழா பாடசாலை அதிபர் ஆ. மகேசு தலைமையில் நடைபெறும். இவ் விழாவில் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட் திரு.பி.எம். இம்மானுவேல்பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் ஏ.என்.எம். திருச்செல்வம், புற்றளை மகா வித்தியாலய இளைப்பாறிய அதிபர் திரு. எட்வேட்யோசுவா, இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் கு. கந்தையா, பருத்தித்துறை பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கப் பொது முகாமையாளர் கே. இராசலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (ஐ-173)

# ஆனை விழுந்தான் மயான சுற்றாடலில் கழிவுகள்

புலோலி ஆனை விழுந்தான் பொது மயானத்தின் சுற்றாடலில் துர்நாற்றம் வீசுகிறது.

இறைச்சிக்காக வெட்டப்பட்ட ஆடு, மாடுகளின் எலும்புகள், தோல்கள் உட்பட பல்வேறு கழிவுப்பொருள்கள் அச்சுற்றாடலில் கொட்டப்பட்டு வருவதாலேயே இத் துர்நாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆனை விழுந்தான் வீதியால் பயணஞ் செய்வோரும், சடலங்களை தகனக்கிரியைக்காக இம் மயானத்துக்கு எடுத்துச் செல்வோரும் இத் துர்நாற்றத்தினால் பெரிதும் சங்கடப்படுகிறார்கள்.

இக்கழிவுப் பொருள்களினால் தொற்று நோய்களும் பொதுமக்கள் மத்தியில் பரவக் கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

களவாக ஆடு, மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவோரே இச் சுற்றாடலில் கழிவுப் பொருள்களைக் கொண்டுவந்து கொட்டுவதாகத் தெரியவருகின்றது.

(ஐ-173)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 — 05 — 1916 | 18 — 11 — 1997 |

### திருமதி பாலன் சின்னம்மா

அன்னாருடைய இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு (18-12-97) இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள அவரின் சபிண்டிகரண நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

கனகசபை வீதி.
மானிப்பாய். (51763)

---

## பாலர் பாடசாலை வெள்ளிவிழா

மானிப்பாய், டிச. 18

சங்குவேலி பாலர் பாடசாலையின் ஆண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 1.00 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினராக உடுவில் பிரதேசச் செயலர் ஆ. மகாலிங்கம் கலந்து கொள்வார். (ஐ-90)

## விவசாயிகள் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், டிச. 18

யாழ் மாவட்டத்தில் உள்ள விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் இம் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு நாளை வெள்ளிக்கிழமை கமத்தொழில் காப்புறுதிச் சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது. (ஐ)

---

## சமூக தொழிநுட்பக்கல்வி நிலையம் (கொம்ரெக்) சித்தன்கேணி

### பகுதிநேர ஊழியர்களுக்கான விண்ணப்பம்

எமது கல்வி நிலையத்தில் 1998 ஆம் ஆண்டிற்கான பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சி நெறிகள்:

1. தட்டச்சு, சுருக்கெழுத்து — தமிழ்
2. தட்டச்சு, சுருக்கெழுத்து — ஆங்கிலம்
3. தையற் பயிற்சி
4. நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துநர்

குறிப்பு : — விரிவுரை, செய்முறை தெரிந்தவர்கள் அல்லது இதில் ஏதாவது ஒரு பகுதி தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் கல்வி நிலையத்தில் 21 — 12 — 1997 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளலாம். வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி — 31 — 12 — 1997

தலைவர்,
சமூக தொழிநுட்ப கல்வி நிலையம்,
சித்தன்கேணி. (51902)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 15 — 06 — 1930 | 20 — 11 — 1997 |

### அமரர் நாகப்பிள்ளை கிருஷ்ணன்

கடந்த 20—11—1997 அன்று எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டுவிட்ட எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டு உதவி செய்த அனைத்து உறவினர்கள் நண்பர்களுக்கும் எமது நன்றிகள்.

நாளை வெள்ளிக்கிழமை 19—12—97 செல்வச் சந்நிதியில் இடம்பெறவுள்ள அந்தியேட்டி நிகழ்விலும், நாளை மறுதினம் சனிக்கிழமை 20—12—97 அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

பிள்ளையார் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு. (51905)

---

## பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 18

தற்சமயம் நடைபெறும் ஜி.சீ.ஈ (சாதாரணதர) பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பிரதம பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் கொழும்பில் நடைபெற விருக்கிறது.

இந்தஅறிவுறுத்தல் கூட்டத்துக்குச் செல்ல உள்ளவர்களை வேம்படி மகளிர் கல்லூரியில் இயங்கும் வலயம் ஒன்றின் கல்வித் திணைக்கள பரீட்சைப் பகுதியினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

விடைத்தாள்கள் மதிப்பீட்டாளர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பிறப்புப் பதிவு செய்யாதோர் விவரம் சேகரிப்பு

வடமராட்சி, டிச. 18

சிறுப்பிட்டி மேற்கு, சிறுப்பிட்டி கிழக்கு, புத்தூர் வடக்கு, மேற்கு ஆகிய கிராமங்களில் இதுவரை பிறப்புப் பதிவு மேற்கொள்ளாதோரின் பிறப்புப் பதிவுகளைச் செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென இக்கிராமங்களில் பிறப்பு பதியாதோரின் விவரங்களை ஐ நா. சிறுவர் நிதியம் சேகரித்து வருகிறது. (ஐ-173)

---

## முதலாண்டு நினைவஞ்சலி



### அமரர் சோதி அலெக்ஸ்சாந்தர்

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 03 — 03 — 1943 | 18 — 12 — 1996 |

ஆண்டு ஒன்று இமைப்பொழுதே
கழிந்திட்டாலும் ஆறாகும் கண்ணீர்
அடங்கவில்லை ஆதரவாய் வழிகாட்டி
மறைந்தீரே! உங்கள் ஆன்மாவின் சாந்திக்காக
ஆராதிக்கின்றோம் ஆறுமோ எம் துயர்
எப்போதும் பிரிவால் வாடி நிற்கும்:

மனைவி, மகன்,
உற்றார், உறவினர்கள்.

828, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[51894]

---


SALE SALE SALE

★ நத்தார் & புதுவருட மாபெரும் மலிவு விற்பனை ★

காவேரி சில்க்ஸ்
48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ரம்மியாஸ் சில்க்ஸ்
123, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(51906)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளைப் பகுதியில் மலேரியா பரவுகிறது

தென்மராட்சி, டிச. 18

பளைப் பகுதியில் மலேரியாக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகிறது. பளை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சை பெற வருவோரில் தினமும் இரத்தப் பரிசோதனை செய்யப்படும் 75 பேரில் முப்பதுக்கு மேற்பட்டோர் மலேரியாக் காய்ச்சலினாலும் மூளை மலேரியாக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாக மலேரியா தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

தினமும் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு 300-க்குமேற்பட்டோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பளை ஆஸ்பத்திரியில் மலேரியா பரிசோதனை செய்வதற்குரிய நுண்ணியலாளர் பணியாற்றுவதால் மிருசுவில் தொடக்கம் தாளையடி வரையிலான நோயாளர்கள் இரத்தப் பரிசோதனைக்காக இவ் ஆஸ்பத்திரிக்கே வாகனங்களிலும் சைக்கிள்களிலும் வருகின்றனர்.

நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இரத்த பரிசோதனை அறிக்கைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும், தினமும் 100-க்கு மேற்பட்டோரின் இரத்தம் பரிசோதனை செய்யப்படுகின்ற போதிலும் பல நோயாளர்களின் இரத்தம் பரிசோதிக்க முடியாத நிலையில் தேங்கி வருவதாகவும், இவற்றுடன் கொடிகாமம், செம்பியன்பற்று ஆகிய ஆஸ்பத்திரிகளிலிருந்து வரும் இரத்த பரிசோதனைக் கண்ணாடிகளையும் உடனுக்குடன் பரிசோதனை செய்ய முடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# மட்டு. சிறைக் கைதிகள் அடையாள உண்ணாவிரதம்

மட்டக்களப்பு, டிச.18

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள கைதிகள் நேற்று முன்தினம் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

களுத்துறைச் சிறைச்சாலை சம்பவத்தை கண்டித்தும் —

அங்குள்ள தமிழ்க் கைதிகளின் சாகும் வரையான உண்ணாவிரதப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியும் —

மட்டக்களப்புச் சிறைச்சாலையிலுள்ள சாதாரண கைதிகள் உட்பட சகல கைதிகளும் நேற்று மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(உ-21)

## ஆண்டு 9 பரீட்சை

ஆண்டு9 கனிஷ்ட தொழில்நுட்பப் பரீட்சைக்கான சுட்டிலக்கங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் —

அவற்றை கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்று மாணவர்களுக்கு வழங்குமாறும் —

பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

# மேட்டுநிலச் செய்கைக்கு யூரியா வழங்க ஏற்பாடு

வடமராட்சிபிரதேசமேட்டுநிலப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு யூரியா உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக புலோலி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இதற்கென மேட்டு நிலப் பயிர்ச் செய்கையின் பரப்பளவு, விவசாயிகளின் விவரங்கள் போன்ற தகவல்களைத் தந்துதவுமாறு இப் பிரதேச கமக்காரர் அமைப்புக்கள் கேட்கப்பட்டுள்ளன.

(ஐ-173)

# சிறுப்பிட்டி ச.ச. நிலையங்கள் கசிப்பை ஒழிக்க முயற்சி

## பொதுமக்களுடன் இணைந்து சேவை

அண்மைக் காலமாக யாழ்ப்பாணச் சமூகத்தில் உயிர்க்கொல்லியாக மாறியுள்ள கசிப்பு உற்பத்தியையும், விற்பனையையும் முற்றாகவே தடுத்து நிறுத்தும் வகையில் சிறுப்பிட்டி மேற்கு, சிறுப்பிட்டி கிழக்குப் பகுதிகளில் முன் உதாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுப்பிட்டிப் பகுதியில் உள்ள உதயதாரகை சனசமூக நிலையமும், அண்ணா சனசமூக நிலையமும் இணைந்து அப்பகுதிகளுக்கான கிராம சேவகர்களின் உதவியுடன் கசிப்பு உற்பத்தி, விற்பனை என்பவற்றை தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

கசிப்பு உற்பத்தியாலும், விற்பனையாலும் அண்மைக் காலமாக சிறுப்பிட்டிப் பகுதிகளில் பலர் மரணமடையவும், உளரீதியாகப் பாதிப்புறவும் நேரிட்டது. சிலர் கண் பார்வை இழந்த சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன.

அதனைத் தொடர்ந்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்கள் சிலர் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் தொடர்ந்தும் விற்பனையில் ஈடுபடுகின்ற சமயத்தில் சட்டத்தின் முன் நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சன சமூக நிலையங்கள் தமது பகுதியில் வாழும் பொதுமக்களினதும் சிறுப்பிட்டி மேற்கு கிராம அலுவலர் உதயகுமார், சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் சிறீகாந்தராசா, நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் சண்முகவடிவேல், புத்தூர் சமாசத் தலைவர் கதிர்காமநாதன் ஆகியோரின் ஒத்துழைப்புடன் கசிப்பு உற்பத்தியை தடைசெய்யும் வகையில் பொதுக் கூட்டமொன்றை அண்மையில் ஒழுங்கு செய்திருந்தன.

இக் கூட்டத்தில் கசிப்புப் பாவனையால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து மக்களுக்கு எடுத்து விளக்கப்பட்டது. சமூகத்தின் சீர்கேடுகளுக்கு காரணமாக இருக்கும் தீய சக்திகளை கூட்டத்தின் முன் கொண்டுவருவது குறித்தும் அங்கு ஆராயப்பட்டது.

கசிப்புக்கலாசாரத்திற்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இளைஞர்கள் மத்தியில் கசிப்பு அருந்தும் பழக்கம் பரவுவதை தடை செய்யவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் உதயதாரகை சனசமூக நிலையச் செயலாளர் செ. பிரபாகரன் தெரிவித்தார்.

(ஐ-7)

# பௌதிகவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 17

ஜி. சீ. ஈ. உயர்தர மாணவருக்கு பௌதிகவியலைக் கற்பிற்கும் ஆசிரியர்களுக்கான இலத்திரனியல் கருத்தரங்கொன்று இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் துறைவிரிவுரை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், யாழ். கல்வித்திணைக்கள வலயம் 1, வலயம் 2, ஆகியவற்றின் அனுசரணையுடன் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இக்கருத்தரங்கு நடைபெறும்.

இலத்திரனியல் விரிவுரைகளும்செயன் முறையும் யாழ். பல்கலைக்கழக பௌதிகவியற் பேராசிரியர் க. கந்தசாமி நிகழ்த்துவார்.

(உ-9)

# விளையாட்டு நிகழ்வு

வடமராட்சி, டிச. 18

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் அமரர் எம். செல்லத்துரை ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கென நடத்திவரும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் அல்வாய் விக்கிரமன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இப் போட்டிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(ஐ-173)

# கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் படம் பிடிக்கப்பட்டது எவ்வாறு?

கொழும்பு, டிச. 18

கடந்த வெள்ளிக்கிழமை களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் வெட்டப்பட்டும் தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டபோது அந்தச் சம்பவம் எவ்வாறு புகைப்படம் பிடிக்கப்பட்டது என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சு விசேட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை விசாரணையில் ஈடுபடுத்தியுள்ளது.

கடந்த திங்கள் காலை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற உயர்மட்ட அதிகாரிகள் மகாநாட்டில் புகைப்படம் எடுக்கப்பட்ட விடயம் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல், கொலைச் சம்பவங்கள் ஆகியன புகைப்படம் எடுக்கப்பட்டிருப்பதால் இந்தத் தாக்குதல் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சு சந்தேகிக்கிறது.

தாக்குதல் சம்பவத்தை விட புகைப்படம் எடுக்கப்பட்ட விடயம் அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியை உருவாக்கியுள்ளது என சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-10)

# பட்ஜெட் நிறைவேறியது

கொழும்பு, டிச. 18

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வரவு செலவுத்திட்டத்தின் மீதான மூன்றாவது வாசிப்பின் போது 127 க்கு 81 என்ற வாக்குகளின் அடிப்படையில் வரவு — செலவுத் திட்டப் பிரேரணை நிறைவேறியது.

தமிழர் விடுதலைக்கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி. இ. தொ. காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி உட்பட அனைத்துக் கட்சிகளும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தன. ஐ. தே. கட்சி மட்டும் எதிர்த்து வாக்களித்தது.

(உ)

# பொதுசுகாதார பரிசோதகருக்கு மருத்துவ பீடத்திலும் பயிற்சி

திருநெல்வேலி, டிச. 18

பொதுச்சுகாதார பரிசோதகர் பயிற்சிநெறியில் பயிற்சி பெற்றுவரும் பயிற்சியாளர்களுக்கு வாரத்தில் இரு தினங்கள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் தொடக்கம் யாழ். சுகாதார திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி நெறியில் 42 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 18 மாத கால பயிற்சி இவர்களுக்கு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

# மக்களுக்குச் சேவை செய்வதே கூட்டுறவாளர்களின் பணி

## வீரசிங்கம் நினைவுக் கூட்டத்தில் பேச்சு

நல்லூர், டிச. 18

கூட்டுறவு இயக்கம் இன்று இங்கு இல்லாதிருந்தால் மிகக் கூடுதலான பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகி இருக்கும். கூட்டுறவாளர்களை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்பது தவறு. யார் என்ன சொன்னாலும் நாம் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதைக் கூட்டுறவாளர்கள் மனதில் இருத்துவது அவசியம்.

கூட்டுறவுப் பெரியார் அமரர்வீரசிங்கத்தின் 33-வது நினைவு நாள் விழாவில் பேசிய யாழ்ப்பாணம். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அமரர் வீரசிங்கத்தின் நினைவு விழா யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நகரில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

உதவி ஆணையாளர் சண்முகநாதன் மேலும் பேசும் போது தெரிவித்ததாவது;

அரசியல், கல்வி, கூட்டுறவுத்துறை என்பவற்றில் அமரர் வீரசிங்கம் திறமை பெற்றிருந்த போதும், அவர் கூட்டுறவுத் துறையிலேயே தனது முத்திரையைப் பதித்தார். தூய்மையான கூட்டுறவுச் சிந்தனை கொண்டவராக அவர் விளங்கியதாலேயே அவர் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவராக முடிந்தது.

கூட்டுறவுத்துறை சுதந்திரமாக இயங்கவேண்டும் என்பதே அரசின் கோட்பாடு என்பது அது வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சங்கங்கள் சிறந்த சேவையை வழங்கக் கூட்டுறவுத் திணைக்களம் உதவுகிறதே தவிர அது சங்கங்களுக்குக் கடிவாளம் இடவில்லை. அமரர் வீரசிங்கம் போல் தூய்மையுடன் செயற்பட கூட்டுறவாளர்கள் உறுதி கொள்ள வேண்டும் — என்று தெரிவித்தார்.

திரு. கனகசபாபதி தனது தலைமை உரையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடமாகாணம் முழுவதும் கூட்டுறவு விதையை ஊன்றி அது பெரும் விருட்சமாக வளரக் காரணம் பெரியார்வீரசிங்கமே. மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராக இருந்து கல்விச் சேவைக்குத் தொண்டாற்றியதுடன் இலங்கையில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பமானதைத் தொடர்ந்து யாழ். மாவட்டக் கூட்டுறவுக்கு முன்னோடியாக அவர் திகழ்ந்தார். கூட்டுறவு ஒரு தனிப்பட்ட தாபனமாக இல்லாமல் பிறருக்கு உதவும் அமைப்பாகவும் மனிதனை மதிக்கும் கொள்கை பொதிந்ததாகவும் உள்ளதால் 'கூட்டுறவு ஒரு மதம்' என்று கருதியவர் அவர்.

1942 இல் உருவாக்கப்பட்ட ஐக்கிய பண்டகசாலை கூட்டுறவின் அடிநாதமான ஐக்கியத்தைக் கொண்டிருந்ததால் அதற்கு அமைவாக ஐக்கிய மேற்பார்வைச் சபையை வழி நடத்தினார். ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் செயற்படும் உண்மையை, சமுதாய முன்னேற்றத்திற்காக பயன் படுத்தியவர் அமரர் வீரசிங்கம் — என்று தெரிவித்தார்.

கூட்டுறவாளர் பண்டிதர் க. நாகலிங்கம் பேசும் போது கூறியதாவது:-

கூட்டுறவுச் சங்கங்களின் கடிவாளத்தை இன்று கூட்டுறவுத்திணைக்களமே வைத்துள்ளது. தலைவர், இயக்குநர் சபைக்கு அதிகாரம்இல்லை. உறுப்புரிமைப்பணத்தை ஒரு ரூபாவில் இருந்து நூறுரூபாவாக அதிகரித்ததன் மூலம் ஏழைகள் சங்கத்தில் நுழைவதைத் தடுத்துள்ளது. கூட்டுறவுச் சங்கப்பணத்தில் இயங்கும் மக்கள் வங்கி சங்கத்திற்கே கூடிய வட்டிக்குப் பணம் கொடுக்கிறது. இப்படியான நிலைமைகள் மாற்றப்படவேண்டும் கூட்டுறவுச் சங்கம் முழுமையாக மக்கள் மயப்பட்டதாக அமைய வேண்டும்.

அமரர் வீரசிங்கம் இருந்திருந்தால் கூட்டுறவுத் திணைக்களம் கூட்டுறவுச் சங்கத்தைக் கட்டுப்படுத்துவதை அனுமதித்திருக்கமாட்டார்— என்றார்.

பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் அருட்திரு. எஸ். டேமியன் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (எண் பார்வை) திருமதி கோ. திருநாவுக்கரசு, பனை தென்னை வள உதவி ஆணையாளர் கே. பரநிருபசிங்கம், யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச்சபைச் செயலாளர் சு. சிவசுப்பிரமணியம், மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்.

முன்னதாக கூட்டுறவுக் கொடியை பண்டிதர் நாகலிங்கம் ஏற்றிவைக்க அமரர் வீரசிங்கத்தின் உருவப்படத்திற்கு உதவி ஆணையாளர் சண்முகநாதன் மலர்மாலை அணிவித்தார்.

வீரசிங்கம் நினைவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை சண்முகநாதன் வழங்கினார்.

கவியரங்கு கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெற்றன.

(அ-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அமைச்சரின் அச்சம்!

அரசாங்க நியமனங்களில் இனவிகிதாசாரத்தைப் பேணுவதற்கு உத்தேச புதிய அரசமைப்பில் காத்திரமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கா, இந்த யோசனையை, அரசமைப்பு விவகார நீதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸிடம் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்க சேவையாளர்களின் பதவி உயர்வுகளை இனவிகிதாசாரத்தில் வழங்கக்கூடாது என்று அண்மையில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனால் இனவிகிதாசார நியமன முறையும் நீதியானதல்ல என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறிவிடலாம் என்ற அச்சம் அமைச்சருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

இப்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பில் இனவிகிதாசார நியமன முறை குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. ஆனால் அரசாங்க சேவையாளரை நியமிப்பது சம்பந்தமான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, அமைச்சரவையானது, பகிரங்க அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்புத திட்டங்களையும் நடத்தைக் கோவைகளையும் வகுத்தல், பதவி உயர்வுகளையும், இடமாற்றங்களையும் செய்யும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள், பகிரங்க அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவிவிலக்கல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பனவற்றுக்கான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கையளிப்பதற்குமான நடவடிக்கை முறை என்பன உட்பட, பகிரங்க அலுவலர்கள் தொடர்பிலான எலலாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்தலும் அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும் — என்பது இப்போதைய அரசமைப்பின் 55 ஆவது சரத்தாகும்.

மேற்படியான அதிகாரத்தை வைத்துக் கொண்டே அரச துறை வேலை வாய்ப்பில், ஆட்சேர்ப்பில் இன விகிதாசார முறை அறிமுகப்படுத்தப்பட்டது பதவி உயர்வுகள் வழங்குவதற்கும் அனேகமாக அதே வழிமுறையே கைக்கொள்ளப்பட்டது.

உத்தேச அரசமைப்பு சீர்திருத்த நகலில், மேற்படி சரத்தில் பெரிதாக மாற்றம் செய்யப்படவில்லை. இப்போதுள்ளவையே தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனாலேயே இன விகிதாசார விதிமுறைக்கு நீதிமன்றத்தின் ஊடாகப் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் அமைச்சர் இரத்தினசிறி விக்கிரமநாயக்காவுக்கு உண்டாகி இருக்கிறது.

அரசாங்கத்துறை நிர்வாக ரீதியாகத் திறம்பட இயங்கினாலேயே நாட்டின் வர்த்தக, பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றம் காணலாம். இனவிகிதாசார ஆட்சேர்ப்பு முறை நிச்சயமாகத் திறமைக்கு குந்தகமாகவே உள்ளது.

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்றெல்லாம் அரசு பேசிக் கொண்டிருக்க இன விகிதாசார ஆட்சேர்ப்பு, நியமனம் அழியா உறுதியாக அரசமைப்பிலேயே ஆழமாக எழுதப்பட வேண்டும் என்று அரச அமைச்சர், ஒருவரே கேட்பது —

எல்லா மக்களும் சமமானவர்களாக நடத்தப்படுவார்கள் என்பது எந்தளவுக்கு விசுவாசம் நிறைந்ததாக இருக்க முடியும் என்ற கேள்வியையே எழுப்புகிறது.

# நத்தார் - புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசிய உணவு பொருள்கள்

## கட்டணம் அறவிடப்படாது கப்பலில் எடுத்து வரப்படும்

கொழும்பு, டிச. 18

நத்தார் — புத்தாண்டுக் கொண்டாட்டங்களையொட்டி கூட்டுறவுச் சங்கங்களும், அரச நிறுவனங்களும் 3 ஆயிரத்து 900 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்களை கப்பல் மூலம் எடுத்து வரவிருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள், கட்டடப் பொருள் கூட்டுத்தாபனம், சி. டபிள்யூ. ஈ., சலுசலா ஆகியன அத்தியாவசியப்பொருள்களை ''மேர்ச் ஹண்டி'' என்ற கப்பலில் எடுத்து வருகின்றன.

கப்பல் கட்டணம் இன்றி இந்த அமைப்புக்கள் பொருள்களை எடுத்து வர வடமாகாண மீன் குடியமர்வு அதிகாரசபை அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து முதல் தடவையாக இந்தக் கப்பலில் கட்டணமின்றி பொருள்கள் எடுத்து வரப்படுவதால் பொருள்களின் விலை குறையலாம எனத் தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்கள், காகிதாதிகள் மற்றும் பொருள்கள் இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்றன. (இ-3)

## சமய சந்நிதியில்

வடமராட்சி, டிச. 18

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவை நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக் கழக மாணவன் ஏ. அனுசாந்தன் ''பேரானந்தம் பேராமை வைக்க வேண்டும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். இந் நிகழ்வுக்கான அறிமுகவுரையை வயாவிளான் உபதபாலதிபர் செ. நடராசா நிகழ்த்துவார். (173)

★ ★ ★

வடமராட்சி, டிச. 18

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் (சிவன் கோயில்) ஆலயத்தில் பன்னிரு திருமுறை ஓதல் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று திருமுறை ஓதல் பூர்த்தி வைபவம் இடம் பெறும். (ஐ-173)

## கமநலச்சேவைப் பகுதியினருக்கு 5 உழவு இயந்திரங்கள் வந்தன

யாழ். கமநலக் சேவைகள் திணைக்களத்திற்கு நான்கு சில்லு நவீனரக உழவு இயந்திரங்கள் ஐந்து கடந்த வாரம் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

உடுவில், கீரிமலை, சாவகச்சேரி, புத்தூர், நல்லூர் ஆகிய கமநலச் சேவை கேந்திர நிலையங்களுக்கு இவை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை இக் கமநல சேவை கேந்திர நிலைய பகுதிகளிலுள்ள விவசாயிகள் தங்கள் காணி உழவுத்தேவைகளுக்கும், விவசாய உள்ளீடுகளை ஏற்றி இறக்கவும் குறைந்த கட்டணத்தில் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று யாழ். கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார் (ஐ-135)

## பாதுகாவலர் சங்க உறுப்பினருக்கு

கைதாகித் தகவல் தெரியாதோர் பாதுகாவலர் சங்கத்துக்கு யுனிசெவ் அமைப்பின் ஆஸ்திரேலியப் பிரதிநிதி நாளை வெள்ளிக்கிழமை விஜயம் செய்ய இருப்பதால் சங்கப் பிரதிநிதிகள் அனைவரையும் அன்று காலை 9 மணிக்கு சங்கப் பணிமனையில் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கிராம ஆய்வு

சிறுப்பிட்டிக் கிராமத்தை அபிவிருத்தி செய்ய ஐ. நா. சிறுவர் நிதியத்தின் ஏற்பாட்டில் கிராமம் முழுவதும் அபிவிருத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதே நேரம் ஐ நா. சிறுவர் நிதியத்தின் கீழ் இப்பகுதி குடிதண்ணீர்ப்பாவனைக்கென 5 பொதுக்கிணறுகள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன.

### கோரிக்கை உதாசீனம் செய்யப்பட்டதற்கே ஆட்சேபம்

# ஆசிரிய நியமனத்தில் பாதிப்பு ஏற்படுத்துவது நோக்கமல்ல

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிக்கை

நாளை 19 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களை நியமிப்பதற்கு நேர்முக பரீட்சை நடத்தப்பட இருக்கிறது அல்லவா?

யாழ். மாவட்ட வேலையற்றபட்டதாரிகள் சங்கம் இதனை ஆட்சேபித்துநேர்முகப் பரீட்சையை தடுத்து நிறுத்தப் போவதாக அறிவித்திருந்தது.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்துக்குப் பதில் அளிக்கும் விதத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் நேற்று அறிக்கை ஒன்றை விடுந்தார்.

இதற்குப் பதில் அளித்து யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் விடுத்த அறிக்கை வருமாறு:-

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் விடுத்த அறிக்கை தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் விடுத்த அறிக்கைக்கு விளக்கம் தர வேண்டிய பொறுப்பு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்திற்கு உண்டு.

நடைபெற இருக்கும் ஆசிரியர் நியமனம் நம் மண்ணுக்குக்கிடைத்த நல்ல வாய்ப்பு என்பது வெளிப்படையான உண்மை. இதைப் பட்டதாரிகள் புரிந்து கொள்வார்கள். ஆனால் இந் நியமனங்களின் இருண்ட பகுதியைச் சற்று திரும்பிப் பார்க்க ஆசிரியர் சங்கம் மறந்ததையிட்டு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கவலை கொண்டுள்ளது. ஊழலும், செல்வாக்கும் நம்மண்ணில் அபிவிருத்தி கண்டுள்ளன. பட்டதாரிகளுக்கு வேறு நியமனங்கள் கிடைக்கும் வாய்ப்பு உண்டு என்ற ஆசிரியர் சங்கத் துணைச் செயலாளரின் அறிக்கைநம் யாழ்ப்பாணத்து மண்ணில் இருந்து சொல்லப்பட்டதா என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கடந்த நான்கு ஆண்டுகளாக பட்டதாரிகள் வேலையின்றி உள்ளனர். அத்தோடு 1993 ஆம் ஆண்டு பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் பெற்ற 20 பேர் பிரதேச செயலகங்களில் உள்ளனர். இவர்களை எந்தப் பதவியில் நியமிப்பது எனத் தெரியாமல் யாழ். செயலக அதிகாரிகள் திண்டாடுகின்றனர். இந் நிலையில் நம்மண்ணில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் உண்டு என்ற கூற்று சிந்திக்க வேண்டிய ஒன்றே.

நம் மண்ணில் காணப்படும் சந்தர்ப்பவாதமும் உயர் பதவி ஆசனத்தைத் தக்க வைக்கத் தத்தளிக்கும் அதிகாரிகளும் உள்ள நிலையில் எவ் வகையிலும் நாம் வேலை பெற முடியாது என்பதை சாதாரண பட்டதாரிகளாகிய எம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெற இருக்கும் நேர்முகப் பரீட்சையை ஆட்சேபிப்பது என்ற சங்கத்தின் தீர்மானம் நேர்முகப்பரீட்சையில் தோற்றவிருப்பவர்களுக்கு எவ்வகையிலும் எதிரானது அல்ல; யாழ். மாவட்டத்தில் உள்ளபாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் பெருமளவு உண்டு. அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு சமகாலத்தில் நேர்முகப் பரீட்சையை நடத்துமாறே நாம் கோருகின்றோம். அதுவரை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சையை ஒத்தி வைக்க வேண்டும். அல்லது பொறுப்பான அதிகாரிகள் எழுத்து மூலமான உத்தரவாதத்தை பட்டதாரிகளுக்குத் தர வேண்டும்.

இக் கோரிக்கையை நாம் வடக்கு — கிழக்கு மாகாண சபைக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் பல முறை விடுத்திருந்தோம். ஆனால் அக் கோரிக்கை உதாசீனம் செய்யப்பட்டது. இந் நிலையில்தான் நாம் நேர்முகப் பரீட்சையை ஆட்சேபிக்கின்றோம். இது 580 பேருக்குமான ஆசிரிய நியமனத்தில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது. பாதிப்பை ஏற்படுத்துவதும் எமது நோக்கமல்ல.

கடந்த நான்கு வருடங்களாக வேலையின்றியிருக்கும் எம்மீது அதிகாரிகள் அக்கறை கொள்ளாமல் இருப்பது வேதனைக்குரியதே. நாம் பட்டப்படிப்பை நிறைவு செய்த காலத்தில் பட்டம் பெற்ற மத்தியமாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணம் என்பவற்றில் உள்ள பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனை ஏன் வடக்கு — கிழக்கு மாகாண சபையால் செய்ய முடியவில்லை? இதை எம் சமூகம் சற்று திரும்பிப் பார்க்க வேண்டும்.

★

## மாதர் சங்கத்துக்கு பான்ட் வாத்தியம்

நீர்வேலி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு பான்ட் வாத்திய இசைக் கருவிகள் வழங்கப்படவுள்ளன

இதற்கென பன்முக வரவு செலவுத்திட்டத்தின் கீழ் கோப்பாய்ப் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் 35 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (ஐ-173)

## மரக்கறி விதை

திருநெல்வேலியில் உள்ள யாழ் மாவட்ட கமநல உள்ளீடுகள் விற்பனை நிலையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான சகல மரக்கறி விதைகளும் சகாய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நல்ல இன மிளகாய், கோவா, பீற்றூட் விதைகளும் கையிருப்பில் உள்ளதாக கமநலச் சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## சாயி சிந்தனை

சிங்கம் உறங்கிக் கொண்டிருக்கையில் குதித்துக் கொட்டமடிக்கும் சிறு பிராணிகளெல்லாம், அது எழுந்து கர்ச்சிக்கும் பொழுது உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடி மறையும். இதைப்போலவே நீங்களும் ஆத்மீக உணர்வு பெற்று பிரணவ மந்திரத்தை ஜபித்தால் மன இருட்டில் அட்டகாசம் செய்யும் மிருக உணர்வுகளெல்லாம் ஓட்டமெடுக்கும்.

காலத்தையும், இடத்தையும் கடந்த மெய்பொருளானது உங்கள் இதயத்திலே வீற்றிருக்கின்றது. பிரணவ உச்சாடனம் மூலமோ அல்லது வேறெந்த அருட்குறிப்பு மூலமோ அதனோடு பொருந்தி நிற்கும்பொழுது கொடிய எண்ணங்களும், தூண்டுதல்களும் உங்களை அணுகா.

ஆண்டவனின் அனுக்கிரகம் உண்டானால் எந்தக் கிரகம் தான் தீங்கு செய்யும்? நீசக் கிரகங்களின் சேர்க்கையால் கொடிய தோஷம் உண்டு என்று சோதிடர் பீதியூட்டினாலும், அந்தத் தோஷமெல்லாம் ஆண்டவன் அருளினால் கணத்தில் மறைந்து விடும்.

அவ்விதமாக இறைவனின் அனுக்கிரகத்தைப் பெற இரு விதிமுறைகள் உண்டு. ஒன்று அன்பாகப் பேசுதல்; இது இகத்துக்கு ஏற்றது. மற்றையது சத்தியத்தைப் பேசுதல்; இது பரத்துக்கு ஏற்றது.

அன்பே மெய்யான ஆயுதம். அன்பொளியைப் பிறர்க்குச் செய்வதற்கு சுற்றிச் சுற்றி ஆத்ம விசாரம் செய்ய வேண்டும். அன்பு பொங்கி எழும் வரை குரோத உணர்வுகள் என்ற இருட்டில் கிடப்பீர்கள். அப்போது அற்ப அசைவு கூட பயத்தையும், சந்தேகத்தையும் உண்டு பண்ணும்.

[ஆதாரம் : - Sathya Sai Speaks: Vol. i]

## நாளை

**மார்கழி 4**

வெள்ளிக்கிழமை

திதி: பஞ்சமி முற்பகல் 10. 38 வரை.

நட்சத்திரம்: மகம் பின் இரவு 4.14 வரை.

சுபநேரம்: 6 23 – 7 53

ராகுகாலம்: 10 53 - 12.23

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தபால் பொதிகள் கப்பலில் வருகின்றன

யாழ்ப்பாணம், டிச. 18

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர் தபால்கள் அடங்கிய 139 தபால் பொதிகள் இன்றைய தினம் செஞ்சிலுவை சர்வதேச குழுவின் கப்பல் மூலம் காங்கேசன் துறை துறைமுகத்துக்கு எடுத்துவரப்படுவதாக யாழ். பிரதம தபாலக அதிபர் எஸ். கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அதேவேளை பெறுமதி வாய்ந்த முத்திரைகள் அடங்கிய 100 முத்திரைப் பொதிகள் விமான மூலம் பலாலி விமான நிலையத்துக்கு எடுத்து வரப்படுகின்றன.

மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து 30 தபால் பொதிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (இ-8)

# தேர்தலுக்குச் சாதகமான சூழ்நிலை கிடையாது என்கிறது கூட்டணி

கொழும்பு, டிச. 18

யாழ். மாவட்டம் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுவதற்கு அடிப்படையான, சாதகமான சூழ்நிலை இல்லை. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தளம் இழந்துவிடக் கூடாது என்பதற்காகவே, தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் நேற்று செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடைபெறுவதற்கான சூழ்நிலை இல்லை. இது பற்றி அரசிடம் பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளோம்.

ஆனால் அரச தரப்பு தேர்தல் நடத்தப்படும் என்பதில் உறுதியாகவிருக்கின்றது. இதற்கான காரணம் எமக்குப் புரியவில்லை?

தற்போது கூட தேர்தலைப் பின்போட்டால் நல்லது என்றுதான் எதிர்பார்க்கின்றோம். வேட்பு மனு கோரப்பட்ட பின்னராவது பின்போட்டாலும் நல்லது என்றார்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தொலைபேசி மூலம் கருத்து தெரிவிக்கையில், தேர்தலில் போட்டியிடுவது குறித்து எந்தவொரு தீர்மானமும் இதுவரை எடுக்கவில்லை. மக்கள் கருத்துக்களை தற்போது திரட்டி வருகின்றோம்.

மக்கள் கருத்துகளுக்கு ஏற்ப தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்று தீர்மானம் எடுக்கப்படும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எமது கட்சி பெரிது படுத்தவில்லை. இது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக அமையமாட்டாது. மாகாண சபை அல்லது பிராந்திய சபைத் தேர்தல்களுடன் இதனை ஒப்பிட முடியாது என்றார்.

மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தனா கருத்துத் தெரிவிக்கையில்,

நியாயமான சுதந்திரமான தேர்தல்கள் நடைபெறுவதற்கு அடிப்படைத் தேவையான பாதுகாப்பான சூழ்நிலை இல்லை.

வாக்காளர் இடாப்பு கேள்விக்குறி? சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடத்த முடியுமா? என்று கேட்டுத் தேர்தல் ஆணையாளருக்கு எமது கட்சி அனுப்பிவைத்த கடிதத்திற்கு இதுவரை பதில் இல்லை.

போட்டியிடும் தமிழ் அரசியல் கட்சிகள் கூட சுதந்திரமான தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்குச் சாதகமான சூழ்நிலைகள் இல்லை என்றார். (இ-21)

## மருத்துவபீட விஞ்ஞானபீட விரிவுரைகள்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விஞ்ஞான பீடத்தின் 1996/97 கல்வி ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என பதிவாளர் கலாநிதி க. குணராஜா தெரிவித்தார்.

இம் மாணவர்களுக்கான நெறிப்படுத்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் காலையிலும் ஆங்கில வகுப்புகள் இத்தினங்களில் மாலையிலும்—நடைபெறும். அதனைத்தொடர்ந்து வரும் நாள்களிலும் ஆங்கில வகுப்புகள் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-9)




நாடக அரங்கக் கல்லூரி

கருத்தரங்குத் தொடர்-10

இப்சனின்
ஒரு பாவை வீடு

குழந்தை
ம. சண்முகலிங்கம்

20-12-97 சனி 3.30 மணி

யா/கந்தர்மடம்
சைவப்பிரகாச வித்தியாலயம்

ஆர்வலர்களைக்
கலந்து கொள்ளுமாறு
வேண்டுகின்றோம்.

- இயக்குநர்

(சி/2382)


## ஜனாதிபதி..

(முதலாம் பக்கத் தொடர்)

தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்த கோரிக்கைகள் ஆகும்.

தேர்தல் ஆணையாளர் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கைகள் குறித்து ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தார் என்று கொழும்புத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (இ-21)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

களை அவ்வாறு பின்போடும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை.

வேட்பாளர்களும், வாக்காளர்களும் எதுவித அச்சமும் இன்றி தேர்தலில் பங்குபற்ற அரசாங்கம் பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்கிறது.

தேர்தல் தொடர்பான பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு அலவிமௌலானா மேலும் கூறினார். (இ-9-3)

## 4 இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்)

வாய்ப் பகுதிகள் நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் சுற்றிவளைக்கப்பட்டு படையினரால் பெரும் தேடுதல் நடத்தப்பட்டது.

வடமராட்சியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 புலிகள் உயிரிழந்ததாகவும்—

அவர்களிடமிருந்து படையினர் ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும்— பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்திருந்தன. (இ-173-109)

## பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில்

### தள நிலைமை குறித்து அறிக்கை

யாழ். மாவட்ட நிலைமையை நேரில் அறிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் 3 பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அங்குள்ள மக்களின் கருத்தை அறிந்து கொண்டு இன்று அவர்கள் கொழும்பு திரும்புவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண தள நிலைமை குறித்து இக்குழு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உயர் மட்டத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-21-3)

### அச்சுவேலி மக்களின் நன்மைகருதி

## கால்நடை வைத்தியர் பிரிவை இயங்க வைக்கக்கோரிக்கை

அச்சுவேலி, டிச. 18

கோப்பாய்ப் பிரதேச மிருகவைத்திய பிரிவு மாதத்தில் குறித்தொதுக்கப்பட்ட தினங்களில் அச்சுவேலியில் செயற்பட ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

அச்சுவேலி சனசமூக நிலையங்களின் ஒன்றியமும் அச்சுவேலி தெற்கு விவசாயிகள் சம்மேளனமும் முன்கண்டவாறு கோரியுள்ளன.

கோப்பாய் மிருகவைத்திய பிரிவு நீர்வேலியில் நிரந்தரமாக செயற்பட்டு வருவதால் வளலாய், இடைக்காடு, அச்சுவேலிப் பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்போரும், விவசாயிகளும் நீண்டதூரம் கால்நடைகளைக் கொண்டு சென்று சிரமப்படுவதாகவும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே கால்நடை வளர்ப்போரின் வசதியைக் கருத்திக்கொண்டு பகுதி நேரமாக மாதத்தில் குறித்து ஒதுக்கப்பட்ட தினங்களில் அச்சுவேலியில் மிருகவைத்தியப் பிரிவு செயற்பட ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-11)

## பாரதீய ஜனதா....

(முதலாம் பக்கத் தொடர்)

கட்சியின் மூத்த தலைவர்கள் தம்முடன் பேச்சு நடத்திய பின்னர், இரு கட்சிகளும் கூட்டணி அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

பாரதீய ஜனதா தலைவர்களில் ஒருவரான எல். கே. அத்வானி நேற்று ஜெயலலிதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பின்னர் இந்தக் கூட்டணி பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. (இ-8)

## மாநகர, நகர,..

(முதலாம் பக்கத் தொடர்)

எடுக்கப்பட்டுள்ளது.

மாநகர முதல்வரின் மாத அலவன்ஸ் 9 ஆயிரத்து 950 ரூபாவில் இருந்து 12 ஆயிரத்து 450 ஆகவும்—

பிரதி முதல்வரின் மாத அலவன்ஸ் 6 ஆயிரத்து 700 ரூபாவில் இருந்து 8 ஆயிரத்து 200 ஆகவும்—

உறுப்பினர்களின் அலவன்ஸ் 4 ஆயிரத்து 750 ரூபாவில் இருந்து 5 ஆயிரத்து 750 ஆகவும்—

நகரசபைத் தலைவரின் அலவன்ஸ் 5 ஆயிரத்து 400 ரூபாவில் இருந்து 7 ஆயிரத்து 900 ஆகவும் —

உப- தலைவரின் அலவன்ஸ் 2 ஆயிரத்து 850 ரூபாவில் இருந்து 4 ஆயிரத்து 350 ரூபாவாகவும்—

உறுப்பினர் அலவன்ஸ் 2 ஆயிரத்து 95 ரூபாவில் இருந்து 3 ஆயிரத்து 250 ஆகவும் —

பிரதேச தலைவரின் அலவன்ஸ் 5 ஆயிரத்து 400 ரூபாவில் இருந்து 7 ஆயிரத்து 900ரூபாவாகவும் —

உப - தலைவரின் அலவன்ஸ் 2 ஆயிரத்து 775 ரூபாவில் இருந்து 4 ஆயிரத்து 275 ரூபாவாகவும் —

உறுப்பினரின் அலவன்ஸ் 2 ஆயிரத்து 95 ரூபாவில் இருந்து 3 ஆயிரத்து 250 ரூபாவாகவும் — அதிகரிக்கப்படவிருக்கிறது.

அதேநேரம் —

மாநகர முதல்வர், நகரசபைத் தலைவர், பிரதேச சபைத் தலைவர் அரச ஊழியராக இருந்தால் அவர் அரச சேவையில் இருந்து இந்தப் பணிக்கு விடுவிக்கப்படுவார்.

பிரதி உறுப்பினர், உறுப்பினர்கள் இரு பதவிக்கும் சம்பளம் பெறுவர். மாதத்தில் இரு தடவைகள் அவர்களுக்கு கடமை லீவு வழங்கப்படும். (இ-21-3)


யாழ்/ நுகர்வோர் பாதுகாப்பு சங்க
வருடாந்த பொதுக்கூட்டம்
1998

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 04-01-98 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்/ இந்து மகளிர் பாடசாலையில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்கவும். புதிதாக உறுப்புரிமை பெற விரும்புவோர் டிசம்பர் 27 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
யா/ நு/ பா. சங்கம்.

(51919)



யாழ்ப்பாணம்
வணிகர் கழகம் விடுக்கும்
அன்பான வேண்டுகோள்!

1998 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும், 1998 ஆம் ஆண்டு தை மாதம் நான்காவது கிழமையில் நடைபெற இருப்பதால், பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்து முடிவெடுக்க வேண்டிய பிரேரணைக்கான முன்னறிவித்தல் எழுத்து மூலம் கழகப் பணிமனையில் 29 — 12 — 97 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றோம்.

2. பொதுமக்களின் நலன் கருதி நத்தார் பண்டிகையையும், புதுவருடப் பிறப்பையும் முன்னிட்டு 20 — 12 — 97 தொடக்கம் 28 — 12 — 97 வரையுள்ள சனி, ஞாயிறு நாள்களிலும், அரச வர்த்தக வங்கி விடுமுறை நாள்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களைத் திறந்து வியாபாரம் செய்ய சகல வர்த்தகர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும் இவ் விடுமுறை நாள்களில் வர்த்தக ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமென்பதனையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல. 19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
18. 12. 97

([illegible])



எமது புதிய வெளியீடு!

விஜேசாந்தி, ராம்கி நடித்த
ஓ தடயம்
மம்முட்டியின்
ஓ அரசியல்
அப்பாஸின்
ஓ பூச்சூடவா
ஓ முரட்டுக்காதல்
அஜித்குமார் நடித்த
ஓ ரெட்டை ஜடை வயசு
ஓ புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.

ஒறிஜினல் வெளியீடு!
MR. பாரத்
என் தங்கை கல்யாணி
தங்கைக்கோர் கீதம்
புதிய பறவை
அண்ணன் ஒரு கோயில்
குலேபகாவலி

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org